செ.வெ.எண்:16 நாள்: 11.06.2021

**கரூர் மாவட்டம்**

**குழந்தை தொழிலாளர் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு ‘‘குழந்தை தொழிலாளர் எதிர்ப்பு உறுதிமொழியை’’ மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் மு வடநேரே,இ.ஆ.ப.,அவர்கள் தலைமையில் அனைத்து அரசுத்துறை அலுவலர்களும் எடுத்துக்கொண்டனர்.**

குழந்தைகள் மற்றும் வளரிளம் பருவத்தினரை பணியில் ஈடுபடுத்துவதை தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல், குழந்தை தொழிலாளர் முறையினை அகற்றுவதற்கான ஆண்டுதோறும் ஜீன் மாதம் 12 ஆம் நாள் குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு நாளாக அனுசரிக்கப்படுகின்றது. நடப்பாண்டில் 12.06.2021 சனிக்கிழமை அரசு விடுமுறை என்பதால், இன்று (11.06.2021) குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு தின உறுதிமொழி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் மு வடநேரே,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் அனைத்துத்துறைகளின் அரசு அலுவலர்கள் சமூக இடைவெளியை கடைபிடித்து உறுதிமொழியை எடுத்துக்கொண்டனர்.

“ குழந்தை தொழிலாளர் தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல் சட்டம் 1986--ன் படி 14 வயதிற்குட்பட்ட எந்த குழந்தைகளையும் எவ்வித பணியில் ஈடுபடுத்துவதும், 15 முதல் 18 வயதிற்குட்பட்ட வளரிளம் பருவத்தினரை அபாயகரமான தொழில்களில் ஈடுபடுத்துவதும் தடை செய்யப்பட்டுள்ளது. வளர வேண்டிய பருவத்தில் குழந்தைகளுக்கு நல்ல வழிமுறைகளை சொல்லித்தந்து கட்டாயக்கல்வி உரிமைச்சட்டத்தின் கீழ் 14 வயதிற்குட்பட்ட அனைவரையும் கல்வி கற்க செய்து குழந்தை தொழிலாளர் அற்ற மாநிலமாக உருவாக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தும் விதமாகவும் இந்த குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு நாள் அனுசரிக்கப்படுகின்றது.

அதனடிப்படையில் இன்று நடைபெற்ற உறுதிமொழி எடுக்கும் நிகழ்வில், ‘‘இந்திய அரசியலமைப்பு விதிகளின்படி, கல்வி பெறுவது குழந்தைகளின் அடிப்படை உரிமை என்பதால் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளை ஒருபோதும் எவ்வித பணிகளிலும் ஈடுபடுத்த மாட்டேன் எனவும், அவர்கள் பள்ளிக்கு செல்வதை ஊக்குவிப்பேன் எனவும், குழந்தைகள் தொழிலாளர் முறையை முற்றிலுமாக அகற்றிட சமுதாயத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்துவேன் எனவும், தமிழகத்தை குழந்தைகள் தொழிலாளர் அற்ற மாநிலமாக மாற்றுவதற்கு என்னால் இயன்றவரை பாடுபடுவேன் எனவும் உளமார உறுதி கூறுகிறேன்’’ என்ற உறுதிமொழியை மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையில் அனைத்துத்துறை அரசு அலுவலர்களும் எடுத்துக்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.எம்.லியாகத், மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (பொறுப்பு) திரு.ஷாஜகான் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.**